# மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

## ஊடக அறிவித்தல்

### மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் நாரஹேன்பிட்ட மற்றும் வேரஹெர அலுவலகங்களை பொதுமக்கள் சேவைக்காகத் திறத்தல்.

நாட்டில் பரவிவரும் அதிகளவான கோவிட் -19 நோய்த்தொற்று நிலைமைகள் காரணமாக நாரஹேன்பிட்ட மற்றும் வேரஹெர அலுவலகங்களின் ஊடாக பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படிருந்தாலும், சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு, கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் பொதுமக்களுக்கான சேவைகளை 2021.05.17ஆந் திகதி தொடக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

அவ்வாறே, உரிய சேவைகளைப் பெற 0112677877 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து திகதி மற்றும் நேரங்களை ஒதுக்கிக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகிறீர்கள்.

தற்போது நாட்டிற்குள் மாகாணங்களுக்கிடையிலான நடமாட்டங்கள் வரையறுககப்பட்டுள்ளதால் மேல் மாகாணத்தில் வசிப்பவர்களுக்கு மட்டும் நாரஹேன்பிட்ட மற்றும் வேரஹெர அலுவலகங்களில் சேவைகள் வழங்கப்படுவதுடன் தடைகள் அகற்றப்பட்டதன். பின்னர் வழமைபோல் சேவைகள் வழங்கப்படும்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களது சேவைகள் மாவட்டச் செயலாளரின் ஆலோசனைகளுக்கமைய முன்னெடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப.4.00 மணி வரை 0707677877 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

**சுமித் சீ.கே.அலஹகோன்**

**மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்**

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்.**